பக்கங்கள் 8 விலை சதம் 15

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 21-1-62 | ஞாயிறு | இதழ் 32

## சிங்கள ஊழியர்களே தமிழ் படியுங்கள்! பிரதமரின் உத்தரவு!

வவுனியா, காரியாதிகாரியின் காரியாலயத்தில் கடமையாற்றிய தமிழ் ஊழியர்கள் யாவரும் இடமாற்றம் செய்யப்பட்டு, அவர்கள் இடங்களுக்குசிங்கள ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்! ஆனல், இக்காரியாலயத்தில் கடமையாற்றும் சிங்கள ஊழியர்கள் கட்டாயம் தமிழைப்படிக்கவேண்டும் என்று வவுனியா அரசாங்க அதிபர் திரு. என். பி. எம். செனவிரத்தின கூறியிருக்கிறர். காரியாலயநேரத்தில் ஒரு மணிநேரம் சிங்கள ஊழியர்கள், தமிழ் மொழி பயில்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

சிங்கள அரசாங்க ஊழியர்கள் தங்கள் வேலைகளை ஒழுங்காகச் செய்யக்கூடிய அளவுக்குத் தமிழ் மொழியைப் படிக்க வேண்டும் என்று பிரதமந்திரி கட்டளையிட்டுள்ளாராம்.

# பிரதமரின் நாய்கள் வசிப்பதற்கு பங்களா கட்ட பன்னீராயிரம்!

## உளுத்துப்போன அரசாங்கத்தின் ஊதாரிச் செலவு!

உண்ண உணவில்லாமல், ஒண்டுவதற்கு ஒரு சாண் குடிசையும் இல்லாமல் பல லட்சக்கணக்கான ஏழை மக்கள் இன்னல்கள் பல அனுபவிக்கும் இந்த நாட்டில், பிரதமரின் நாய்கள் வசிக்கும் இடம் கட்டுவதற்காகப் பன்னீராயிரம் ரூபா செலவு செய்திருக்கிறது இந்த அரசாங்கம்!

இலங்கையின் தலைநகரான கொழும்பு நகரிலும், மற்றும் பெரு நகரங்களிலும் லட்சக்கணக்கான எழைமக்கள் இரவு நேரங்களில் படுத்துறங்க ஒரு சிறு இடமும் இன்றி, குளிரில் போர்த்த கந்தைத் துணிதானுமின்றி, நடைபாதைகளின் ஓரங்களில் படுத்துறங்கும் பரிதாபகரமான காட்சி ஒவ்வொருநாளும் காணக்கூடியது!

ஆனல்—

உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, படுத்துறங்கப் பாயின்றி வாழும் பல லட்சம் 'பிச்சைக்காரர்கள்' வாழும் இந்த 'தர்ம துவீப'த்தை ஆளும் பிரதமர் பிரியமாக வளர்த்து வரும் நாய்கள் கொடுத்து வைத்தவைகள்! போன ஜன்மத்தில் அவை செய்த புண்ணியம்தான் என்னவோ?

அந்த நாய்கள்—

பிரதமருக்குச் சொந்தமானவைகளாக இருக்கலாம். ஆனலும், இந்நாட்டு மக்களைவிடவா 'அந்த நாய்கள் மேலானவைகளாகிவிட்டன?'

கொழும்பு நகரில், கொள்ளுப்பிட்டியில், காலி வீதியில் கம்பீரமாகக் காட்சியளிக்கும் பிரதமரின் வாசஸ்தலமாகிய 'அலரி மாளிகை'யில், பிரதமர் பிரியமுடன் வளர்க்கும் நாய்கள் சொகுசாக வாழ்வதற்கென்று, சகல வசதிகளுடனும்கூடிய ஒரு அழகிய 'இல்லம்' அமைக்கப்பட்டுள்ளது. அதைக் கட்டுவதற்கான செலவுதான் பன்னீராயிரம்! ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? ஆனல் இதுஉண்மை!

ஈழத்திருநாட்டின் நிதி நிலைமை மிகவும் பயங்கரமான முறையில் மோசமாகிக் கொண்டிருப்பதாகக் கூறிக்கொண்டு, வரிக்குமேல் வரிவிதித்து ஏழை மக்களின் வயிற்றிலடிக்கும் இந்த அரசாங்கம், தனது சொந்த ஆடம்பரச் செலவுகளுக்கென்று பொதுமக்களின் வரிப்பணத்தை அநியாயமாக வீண்செலவு செய்து வருகின்றது!

இது சம்பந்தமாக அரசாங்க 'பைல்'களிலிருந்த பத்திரம் ஒன்றைப் படி எடுத்துப் பிரசுரிப்பதில் 'புதினம்' பெருமை கொள்கிறது!

இதோ அந்தப் பத்திரம்—

PWD Bill No: 24.
Folio No. 36.
Date of service : November 1960.
Paid out of PWD Vote for maintenance of "Temple Trees."
Under PWD estimates 60/61.
Name of contractor. S. A. J. Silva, Sub Overseer P. W. D.

Payment certified by Executive Engineer Buildings, Colombo West.

*Details*

CONSTRUCTION OF DOG KENNEL IN "TEMPLETREES"

Dog Kennel victory type 20 feet long, 7 feet wide, 5 feet high on brick in cement foundation. Hut with brick walls, cement rendered floor. Extra boarded floor to hut. Aluminium roof over hut. Open run covered with DRC welded mesh welded into iron frame-work including two iron gates and one wooden window complete including anti-corrosive paint

Brick in cement drain 9" x12" including cement rendering laid for required falls.

Automatic flushing system.
TOTAL COST Rs. 12,000.



கைகட்டி, வாய்புதைத்துக் கவனத்தை எங்கோ பதியவைத்திருக்கும் இந்தக் காரிகை யார் தெரிகிறதா? வட இந்தியத் திரைவானில் ஒளிவீசும் தாரகை நூட்டான் தான் இவர்!

'புதினம்' கருத்து

# துப்பறியும் பொலிசார் தூங்கக்கூடாது!

## மூடப் பேய்க் கதைகளுக்கு ஒரு முடிவுகாண வேண்டும்!

யாழ்ப்பாணம் கரையூரிலே சென்ற 11-1-61 இரவு திரேசம்மா என்ற பெண் தன்னுடைய இரண்டு குழந்தைகளையும் பக்கத்திலே வைத்துக்கொண்டு நித்திரை செய்தார். கண்பார்வையற்ற அவரது கணவரும் அதே அறையில் படுத்திருந்தார் இரவு 11 மணியளவில் 3 வயதான மூத்த குழந்தை அழுவதைக் கேட்டுத் திரேசம்மா திடீரென்று எழும்பிப் பார்த்தபோது 9 மாதங்களே நிரம்பப்பெற்ற சின்னஞ்சிறு குழந்தைக் காணவில்லை! வீடெல்லாம் தேடியபின்னர் திரேசம்மா குழறிஅழவே, அயலண்டையில்உள்ளவர்களும் வந்து குழந்தையைத் தேடினார்கள்.

கடைசியில்—

முப்பது யார் தூரத்துக்கப்பாலிருந்த கிணற்றுக்குள் குழந்தையின் பிரேதத்தைக் கண்டு பிடித்தார்கள்!

இதுபற்றிய மரண விசாரணையில் திரேசம்மா கூறியுள்ள சாட்சியம் திடுக்கிடத்தக்கதாக உள்ளது!

### பஞ்சமிப் பேய்!

திரேசம்மா கூறியதாவது:

"இதற்கு 27 நாட்களுக்கு முன்தான் என் கணவரின் தகப்பனார் இந்த வீட்டில் இறந்தார். அன்றுபஞ்சமி. அவர் இறந்த மூன்றாம்நாளே அவருடைய மனைவி கடுமையான சுகயீனமடைந்தார். நாலாம் நாள் அவருடைய சிறியதாயார் பட்டப்பகலில் தம்மை யாரோ அமுக்கியதாகப் பயந்து கூச்சலிட்டார். நாங்கள் இந்த வீட்டைவிட்டு விலகிச் சில நாட்கள் இருந்தோம். அப்போது இங்கே கல்லெறிச் சத்தம் கேட்டதாக அயலவர்கூறினார்கள்!... குழந்தையின் மரணத்துக்குபஞ்சமிப் பேய்தான் காரணமாயிருக்க வேண்டும் எங்களுக்கு விரோதிகள் யாரும் இல்லை. எனக்கு யார்மீதும் சந்தேகமும் கிடையாது"—இவ்வாறு திரேசம்மா தமது சாட்சியத்தில் கூறியுள்ளார்.

மரணவிசாரணை நடத்திய அதிகாரி திரு. எஸ் கனகரத்தினம் இவ்வளவோடு திருப்தியடையாமல் மேலும் விசாரணை நடத்துமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

### பொலீசாரின் கடமை

இந்த அணுக்குண்டு யுகத்தில் பொலிசார் இந்தப் பஞ்சமிக் கதையை நம்பி, ஏனோ தானோ என்று விசாரணையை முடித்து விடக்கூடாதென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்.

திரேசம்மாவின் மாமனார் இறந்த மூன்றாம் நாள் மாமியாருக்குச் சுகயீனம் ஏற்பட்டதும், நாலாம் நாள் கணவரின் சிறியதந்தை மரணமானதும் தற்செயலாக நடைபெற்ற சம்பவங்களாக இருக்கலாம். சிறியதாயார், தம்மை யாரோ அமுக்குவதாகப்பயந்து குழறியது வெறும் மனப்பிராந்தியாகவும் இருக்கலாம்.

ஆனால் நடக்கக்கூடத் தெரியாத ஒன்பதுமாதக் குழந்தை, முப்பது யார் தூரத்திலுள்ள கிணற்றுக்குள் பிரேதமாகக் கிடந்த சம்பவம் அப்படியானதல்ல!

குழந்தைஇரவுநேரத்தில்தவழ்ந்து போய் கிணற்றுக்குள் விழுந்திருக்க முடியுமா? அதற்கேற்ற சாத்தியக்கூறுகள் இருந்தனவா? அப்படியானல்—

இது கொலையா?

துப்பறியும் பொலிசார் இதை நுணுகி ஆராய்ந்து பகிரங்கமாகப் பொது மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்! ஏனெனில் இந்தச்சம்பவத்தில் ஒரு குழந்தையின் மரணம் மட்டும் தங்கியிருக்கவில்லை.

இந்நாட்டில் 'பேய், பிசாசு'என்ற மூடக்கொள்கையை வளர்க்கும் ஒரு பிரசாரமும் இதில்தங்கியிருக்கிறது!

# வர்த்தக ஆசிரியப் பயிற்சிபெற முடியாமல் தமிழ் மாணவர்களின் திண்டாட்டம்!

## கல்வி அமைச்சர் கவனியாத காரணம் என்ன?

கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரியில், வர்த்தக ஆசிரியர் பயிற்சிவகுப்பு 1957-ம் ஆண்டுமுதல் தனிச் சிங்கள மொழியில் மட்டுமே நடைபெற்று வருகின்றது. திரு. தஹநாயக்கா கல்விமந்திரியாக இருந்தகாலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தவகுப்பு இதுநாள் வரையில் தமிழ் மொழியிலும், ஆங்கிலத்திலும் நடைபெறவில்லை; நடைபெற ஒழுங்குகள் எதுவும் செய்யப்படவும் இல்லை.

காலஞ்சென்ற கோப்பாய் பிரதிநிதி திரு கு. வன்னியசிங்கம் அவர்கள், வர்த்தக ஆசிரியர் பயிற்சி வகுப்பை தமிழ்மொழியிலும் நடத்துமாறு, மக்கள் பிரதிநிதிகள் சபையில் வற்புறுத்திக் கூறினார்.

கடந்த வருடம் கோப்பாய் பிரதிநிதி திரு மு. பாலசுந்தரம் அவர்கள் இவ்வகுப்பைத் தமிழ் மொழியில் யாழ்ப்பாணம்தொழில்நுட்பக்கலாசாலையில் அல்லதுபலாலி அரசினர் பாடசாலையில்நடத்தும்படி கல்விமந்திரிக்குவிளக்மான ஒரு கடிதம் எழுதியிந்தார் நமது தற்போதைய கல்விமந்திரியான அல்ஹாஜ் பதி - யூ - தீன் மஹ்மூத் அவர்கள், தகுந்த நடவடிக்கை எடுப்பதாகத் திரு. மு. பாலசுந்தரத்திற்கு அறிவித்திருந்தார். ஆனல் இது நாள்வரை அவர் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை!

கடந்த 4-7-61 ல், நூற்று முப்பத்தைந்து வர்த்தகக் கல்விபயின்ற மாணவர்கள், பிரதம மந்திரி, கல்வி மந்திரி உள்படப் பத்து அதிகாரிகளுக்குக் கடிதங்களை அனுப்பிவைத்தார்கள். அதில், 1957-ம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் வர்த்தக ஆசிரியர் பயிற்சிவகுப்பு சிங்களத்தில் மாத்திரமே நடாத்தப்பட்டு வருவதால், இதுநாள்வரையில் தமிழிலும், ஆங்கிலத்திலும், மட்டுமே கற்ற-சிக்களம் படிக்காத வர்த்தகக் கல்விபயின்ற மாணவர்கள், வர்த்தகஆசிரியர் பயிற்சி பெறமுடியாமல் தவிப்பதையும், அப்படியே படிப்பதாக இருந்தால், தங்களுக்குப் புரியாத மொழியான சிங்களத்தில்தான் படிக்கவேண்டியிருபதாகவும், காரணங்களை விளக்கி தமிழ்மொழியில் இந்த வகுப்பை நடத்தவேண்டியஏற்பாடுகளைச் செய்யுமாறு வேண்டியிருந்தனர். இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட பிரதமர், அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகப் பதிலளித்திருந்தார், ஆனல் இன்றுவரை அதுபற்றியஏற்பாடுகள் எதுவுமே செய்யப்பட்டதாகத் தெரியவில்லை!

இதன் காரணமாக, வர்த்தகக்கலை பயின்ற எண்ணற்ற தமிழ் மாணவர்கள், தங்கள் காலத்தை வீணுகக் கழிக்கவேண்டியிருக்கிறது. எனவே, அகில இலங்கை வர்த்தகக்கலை மன்றம், இந்தமாணவர்களின் நிலையை விளக்கி பிரதமமந்திரி, கல்விமந்திரி முதலியவர்களுக்கும், பாரளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளது.

# குடிகாரர்களுக்கு விசித்திர தண்டனை!

ஜப்பானில் உள்ள யோஹோ என்றநகரத்தில், குடித்துவிட்டுக் கும்மாளமடிக்கும் குற்றவாளிகளுக்கு ஒருவிசித்திரமான தண்டனை அளிக்கப்படுகிறது. பொலிசார் அவர்களைப் பிடித்துக் கொண்டு போய், காவல் நிலையத்தில் வைத்து, குற்றவாளிகள் உளறிக்கொட்டும் உளரல்களையெல்லாம் 'டேப் ரெக்கார்டர்' இயந்திரத்திரத்தில்ஒலிப்பதிவு செய்துவிடுகிறார்கள். அவர்களுக்குப் போதை தெளிந்து, சுய உணர்வு வந்தபிறகு, ஒலிப்பதிவு செய்யப்பட்ட இயந்திரத்தை இயக்கி, அவர்களைக் கேட்கச்செய்கிறார்கள். இது தான் அந்தத் தண்டனை!

இதைப்பற்றி அபிப்பிராயம் தெரிவித்த சிலகுடிகாரர்கள், "அபராதம் போட்டாலும் செலுத்திவிடலாம். ஆனால் இந்தத் தண்டனை தாங்கமுடியாததாக இருக்கிறது!" என்று கூறியிருக்கிறார்கள்!

### கேள்வி—பதில் !

அடுத்தவாரம் தொடக்கம் 'புதின'த்தில் மீண்டும் 'கேள்வி பதில்' பகுதி ஆரம்பமாகிறது. வாசகர்களின் அபிமானத்துக்குப் பாத்திரமான 'கரோல் செஸ்மன்' ரமணன் உங்கள் கேள்விகளுக்குச் சுவையான பதில்களை எழுதத்தயாராகிவிட்டார்! கேள்விகளை அஞ்சலட்டை (போஸ்றகாட்) யில் மாத்திரம் எழுதுங்கள். சிறந்த ஒரு கேள்விக்கு பரிசும் கிடைக்கும்!

# திரை மறைவில்

### 'சுதந்திரன்' ஆசிரியர்

'சுதந்திரன்' பத்திரிகையின் பிரசித்திபெற்ற ஆசிரியர் திரு. எஸ். டி சிவநாயகத்தைத் தெரியாத தமிழ்வாசகர்கள் இருக்கமுடியாது. 'சுதந்திரன்' தடைசெய்யப்பட்ட பிறகு அவர் 'தமிழின்பம்' என்ற பத்திரிகையின் ஆசிரியரானர். தமிழின்பத்துக்கு அவர் 'குயுக்தி'யாரைத் தூக்கிக்கொண் போய்விட்டது பற்றிக்கூட வாசகர்களிடையே ஒரு பரபரப்பு இருந்தது திரு சிவநாயகம் இப்போது எங்கே இருக்கிருர் என்று அறிந்தால் நீங்கள் மூக்கின்மேல் விரலை வைப்பீர்கள்! கொஞ்சக்காலமாக வேலைநிறுத்தக் குழப்பங்களைச் நுணறிக்கொண்டிருக்கும் 'வீரகேசரி'யின் பிரதம ஆசிரியர் பீடத்தில் திரு. சிவநாயகம் இப்போது அமர்ந்திருப்பதாகத் தெரிகிறது! ஆனல்—?

### இடதுசாரி ஒற்றுமையைக் குலைக்க மேத்தானந்தா முயற்சி!

சமீபத்தில் நடந்த எம். இ. பி. மகாநாட்டின்போது இடதுசாரி ஒற்றுமையின் அவசியம் பற்றி அதன் தலைவரான பிலிப்பேசியதும். அதைத் தொடர்ந்து ஒற்றுமைக்கு வித்திடக் கூடிய முறையில் சமசமாஜ கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைதள் நிகழ்ந்ததும் நேயர்கள் அறிந்ததே.

ஆனல் அந்த ஒற்றுமை நடவடிக்கையைக் குலைக்கும் வகையில் திரு மேத்தானந்தா இப்பொழுது நடவடிக்கைகள் எடுத்து வருகிருர். பிலிப்பின் நண்பர்களுள் ஒருவராகவும், எம். இ. பி யின் முக்கிய தலைவர்களுள் ஒருவராகவும், விளங்குபவர்தான் திரு. மேத்தானந்தா. இவர் சிங்கள கலாசாரத்திலும், புத்தமதத்திலும் மிகுந்த பற்றும் பாசமும் கொண்டவர்.

இடதுசாரி ஒற்றுமை குறித்து நடக்கும் பேச்சுவார்த்தைகளின்போது மொழிப்பிரச்சினை. இலங்கை இந்தியர் பிரச்சினை, போன்ற விஷயங்களில் திரு. மேத்தானந்தா மிகவும் பிடிவாதமாக இருப்பதாகத் தெரியவருகிறது இந்தப் பிரச்சினைகளை ஒத்திவைப்பதைக்கூட இவர் விரும்பவில்லையாம் பிலிப் இவர்களின் கருத்துக்களைப் புறக்கணிக்கும் பட்சத்தில் இவரும் இவரது கூட்டத்தினரும் எம். இ. பியைவிட்டே பிரிந்து செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது!

### கல்வி இலாக்காவின் சுற்றறிக்கை.

ஆசிரியர்கள் தாங்கள் தங்கியிருக்கும் விடுதிகளில் மாணவர்களை வைத்திருக்கக் கூடாதென சமீபத்தில் கல்வி அமைச்சு ஓர் அறிக்கை விடுத்தது.

'போர்டிங்' வசதியில்லாத பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளைப் படிக்கவிட்ட பெற்ரேரிடமிருந்து தொலைவிலிருக்கும் தங்கள் மாணவர்கள் ஒழுங்காக இருப்பதற்கும், நல்ல முறையில் படிப்பதற்கும் ஆசிரியர்களுடன் இருப்பதே நல்லதென அவர்கள் கருதினர்.

கல்வி இலாகாவின் சுற்றறிக்கையைக் கண்ட ஆசிரியர்கள் அந்த மாணவர்களைத் தங்கள் விடுதிகளிலிருந்து நீக்குமாறு பெற்ரேருக்கு அறிவித்தனர்.

இப்போது அந்த மாணவர்கள் ஓட்டல்களிலும், தனிப் பட்டவர்கள் நடத்துகின்ற விடுதிகளிலும் தங்கியிருந்து படிக்கின்றனர் அடிக்கடி சினிமா பார்ப்பதற்கும், இரவிரவாகத் தெருக்களில் சுற்றித் திரிவதற்கும் இப்போது அம் மாணவர்களுக்கு நல்ல வசதி கிடைத்துவிட்டது!

### கோபம் வந்தால் சிங்களம்!

திரு. கொல்வின் ஆர். டி சில்வர்விற்கு ஆங்கில மொழியிலுள்ள அறிவைப்பற்றித் தெரியாதவர்கள் இருக்கமுடியாது. சென்ற வாரம் பாராளுமன்றத்தில் வேலை நிறுத்தம் சம்பந்தமாக நடைபெற்ற விவாதத்தின் போது இவர் ஆங்கிலத்தில் மிகவும் அழகான முறையில் சொற்பொழிவாற்றினர். ஆனல் பேச்சின் உச்ச கட்டத்திற்குச் சென்றபோது, மிக்க ஆத்திரத்தோடு இவர் பேசிய நேரத்தில், திடீரென்று சிங்களச் சொற்கள் இவர் வாயிலிருந்து குதித்தன.

கோபித்துப் பேசுவதற்குச் சிங்கள மொழிதான் பொருத்தமானதோ...?



# இவரே எங்கள் அதிபர்!

### (ஆசிரிய கலாசாலை, மட்டக்களப்பு)

"ஆசிரிய கலாசாலை, மட்டக்களப்பு" என்ற விளம்பரத்தைப் படித்து விட்டு, புகையிரத நிலைய வீதியிலிருந்து திரும்பி, நுழைவாயிலினூடே உங்ளே வாருங்கள் ஆண்கள் விடுதியைக் கடந்து விடுதிஉட்புகு வாயிலுக்கு வந்து விட்டீர்களா? ஒரு சிறிய மண்டபம் அதிலே 'அமைதி' என்று மட்டும் பொறிக்கப்பட்டிருக்கிறது. யாரையோ அங்கு காணவில்லையே! என்று திகைக்கிறீர்களா? அதோ! அறையிலிருந்து இருமற் சத்தம் கேட்கிறதே! ஆம், எம்மெதிரே வேட்டி மட்டும் அணிந்த ஒரு திருவுருவம் வீற்றிருக்கிறது. இருங்கள். யாரைப் பார்க்கப் போகிறீர்கள்? சரிஇவ்வழியேசென்றுபாருங்கள்'-வந்தவர்கள் சென்றுவிடுகிருர்கள்.

ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைக்கிருர். எங்கும் ஓரே புகை மண்டலம்! ஒரு புத்தகத்தை விரித்துப் படிக்கிருர். அவ்வேளை, அவர் கண்கள் கலாசாலை வளவை ஒருமுறை நோட்டம் விடுகின்றன. பல வேலைக்காரர்கள் ஓரிடத்தில் கூடிவேலைகளைக் கவனியாது வெற்றிலை போட்டுப் பேசிக் கொண்டிருக்கின்றனர். காவலாளிகள் எங்கோ ஒதுங்கி விட்டனர். மாடுகள் கலாசாலைச் செடிகளைக்கடிக்கின்றன. சில பேராசிரியர்கள் கலாசாலைக்கு வருவார்கள்; வகுப்புக்கு வரமாட்டார்கள். இவற்றையெல்லாம் அக்கறையோடு கவனிக்கமாட்டார். எங்கள் அதிபர்.

ஆனல் —

மாலையில் நடைபெறும் கடவுள் வணக்கத்துக்கோ, வெள்ளிக்கிழமையில் ஆலய வழிபாட்டுக்கோசெல்லாவிட்டால் அவர்பொறுக்கவேமாட்டார். கண்டிப்பார், அன்புவார்த்தைகளால்மட்டும்! சிலவேளை அவர் கூட வகுப்புக்கு வரமாடார். அடிக்கடிபாடமணிகளுக்கு மதிப்புக் கொடுக்கவேண்டுமென்பார்.

வெள்ளிக் கம்பிபோன்ற அடங்காத்தலைமயிர், வெண்ணிறத்தேசிய ஆடை, புதுநிறமேனி, சிறிய 'வண்டி', நேர்கொண்ட பார்வை, அமைதியே குடி கொண்ட சிரித்தமுகம், பேச்சில் இனிமை, விகடக் கலப்பு. இவற்றின் உறைவிடமே எங்கள் அதிபர்.

கலாசாலையில் நடக்கும் இலக்கியவிழா நினைவு விழா, சமய விழா. விளையாட்டுப்போட்டி. சாரணப்பயிற்சி, நாடகங்கள் விருந்துகள் அத்தனைக்கும் ஆக்கமும், ஊக்கமும் தருவதில் எங்கள் அதிபருக்கு நிகர் எங்கள் அதிபரே!

பெரிய அறிவாளிகளை அழைத்து அறிமுகம் செய்து வைத்து சொற்பொழிவுகளையும் கேட்கச் செய்வார். ஈழத்திலுள்ள கணித அறிவியல் வல்லுநரில் இவரும் ஒருவர். உளநூலில் மிகவும் திறமையானவர், எல்லாப்பாடங்களையும் சீரிய ஆற்றலுடன் படிப்பிக்கும் அவருக்குச் சரித்திரம் மட்டும் சரிவராது!

இலங்கையிலுள்ள இருபத்தைந்து ஆசிரியப்பயிற்சிக்கலாசாலைகளில், எல்லாத்துறையிலும் எமது மட்டக்களப்பு அரசினர் ஆசிரியப்பயிற்சிக் கலாசாலை முதலிடம் பெறக் காரணம், எங்கள் அதிபர் திரு. சு கனகலிங்கம் அவர்களே.

அதிபருள் மூத்து, எங்கள் அதிபர்! எங்கள் போன்ற இளம்ஆசிரியர்களின் அறிவுத் தந்தை — அன்புத் தெய்வம் எங்கள் அதிபர்!

— ம. சபாரத்தினம்
மட்டக்களப்பு.

# பத்திரிகை படிக்கிறீர்களா?

உலகத்திலேயே முலன்முதலாகத் தோன்றியபத்திரிகை எது என்று இன்னும் திட்டவட்டமாக முடிவு செய்யமுடியவில்லை, ஆனல், சீனவில் தான் முதன் முதல் பத்திரிகை தோன்றியது என்று சிலஆராய்ச்சியாளர்கள் அபிப்பிராயப் படுகிருர்கள். 'மீகின்பாவோ' என்பதுதான், சீனவில் முதன் முதலாகத் தோன்றிய பத்திரிகையின் பெயராம்! கிறிஸ்துவுக்குப் பின் 4-ம்நூற்ருண்டில், ஸுங் என்ற ஒரு சீனப்பதிப்பாளர் அந்தப்பத்திரிகையை ஆரம்தத்தார். அன்று முதல் ஏறக்குறைய 1, 500 ஆண்டுகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வந்த அந்தப்பத்திரிகை, 1934-ம் ஆண்டு, டிசம்பர் மாதம்தான் நின்றது!

உலகத்தில் முதன் முதலாகத் தோன்றிய பத்திரிகை எது என்று நாம் அறிந்து கொள்ள முற்படுவதற்குமுன், நம் தமிழ்நாட்டில் முதன் முதலில் தோன்றிய பத்திரிகை எது என்பதை அறிந்துகொள்ளவேண்டியது முதற்கடமையல்லவா?

தமிழகத்தில் முதன் முதலாகத் தோன்றிய பத்திரிகை 'தின வர்த்தமானி' என்பது. இந்த முதல் தமிழ்ப்பத்திரிகையின் ஆசிரியர் யார் தெரியுமா? யாழ்ப்பாணம், ராவ்பகதூர் சி, வை. தாமோதரம் பிள்ளை, பி. ஏ; பி எல், அவர்கள்தான்! சென்னைமாநகரில் இந்தப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. ஆனல், அதற்குப் பிறகுதோன்றி திரு. வி. க அவர்களால் நடத்தப்பட்ட 'நவசக்தி' என்ற பத்திரிகைதான் சிறந்தபத்திரிகைஎன்று தமிழறிஞர்கள் அபிப்பிராயப் படுகின்ருர்கள். இன்ற தமிழ்நாட்டிலும், ஈழத்திருநாட்டிலும் எண்ணற்ற தமிழ்ப்பத்திரிகைகள் தோன்றியிருக்கின்றன.

ஆனல் —

பத்திரிகைபடிக்கும் பழக்கமுடைய தமிழ்நாட்டு வாசகர்களோ, மிகமிகச் சொற்பம்! உலக மக்களின் அறிவுவளர்ச்சிக்கு இன்றியமையாத சாதனமாகத் திகழும் பத்திரிகைகளைப் பெரும்பான்மையான மக்கள் படிக்கும் நாடு அமெரிக்காதான் என்று கணக்கெடுக்கப்பட்டுள்ளது அமெரிக்காவில் நூற்றுக்கு அறுபதுபேர்களும், இங்கிலாந்தில் நூற்றுக்கு ஐம்பத்தாறு பேர்களும், ஜப்பானில் நூற்றுக்கு நாற்பது பேர்களும் பத்திரிகை படிக்கும் பழக்கமுடையவர்களாம். ஆனல் இந்திய - இலங்கை இவ்விரண்டு நாடுகளையும் மூழுவதும் கணக்கெடுத்துப் பார்த்தால், கேவலம், ஆயிரத்திற்குப் பதின்மூன்று பேர்கள் கூடப் பத்திரிகை படிப்பவர்கள் இல்லை!

# முதலாவது தமிழ் நாவலாசிரியரின் பழைய நடை!

தமிழ் மொழியில் முதன் முதலாக 1876-ம் ஆண்டு தோன்றிய நாவல் 'பிரதாப முதலியார் சரித்திரம்'. அதன் ஆசிரியர் மாயூரம் திரு. வேதநாயகம் பிள்ளை அவர்கள். அவர் எழுதிய நாவலில் பல உப கதைகளும், நீதிப் போதனைகளும் அடங்கியிருக்கும். நீண்ட வாக்கியத்தொடர்களால் ஆனஅக்கதையில் கணக்கற்ற சமஸ்கிருத பதங்கள் இருப்பதையும் காணலாம். அதுதான் அந்தக்காலத்து நடை! இன்று, எண்ணற்ற நாவலாசிரியர்களும், நாவலாசிரியைகளும் நம் தமிழ்நாட்டில் தோன்றி, புதுப் புதுப் பாணிகளைக் கையாண்டு நாவல்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்! அவைகளைப் படித்து அனுபவிக்கும் தற்கால வாசகர்களுக்குப் பழங்காலத்து நடை சுவையில்லாமலும் இருக்கக்கூடும். இருந்தாலும், பழமையை வைத்துத்தானே புதுமையை உருவாக்கலாம்?

நாநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவுக்கு வந்தனர் போர்த்துக்கேயர். கோவாவை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருந்த அவர்களைக் கடந்த 17-12-61 அன்று, இந்திய அரசாங்கம் வற்புறுத்தி வெளியேற்றியது. போர்த்துக்கேயர் இந்தியாவுக்கு வரும்போது எத்தனையோ இன்னல்களையெல்லாம் அனுபவித்தார்களாம். அதில் ஒரு சம்பவத்தை திரு. வேதநாயகம் பிள்ளை அவர்கள், மிக அழகாக விளக்குகின்றார். அந்தச் சம்பவம், அவர் எழுதிய அதே பழைய நடையில் இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது—

பதினாறும் நூற்றாண்டில் போர்த்துக்கல் (Portugal) தேசத்திலிருந்து கோவைப்(Goa) பட்டணத்துக்குப் புறப்பட்டு வந்த ஒரு கப்பலில் ஆயிரத்து இருநூறு ஜனங்கள் ஏறியிருந்தார்கள். அந்தக் கப்பல் ஒரு மலையில் மோதி உடைந்துபோனதால் இருபது பெயர்கள் தவிர மற்றவர்கள் எல்லாரும் சமுத்திரத்தில் முழுகி இறந்துபோனார்கள். அந்த இருபது சனங்களும் ஒருசிறு படகிலேறித் தப்பித்துக்கொண்டார்கள். அவர்களுக்குப் போதுமான புசிகரணங்கள் இல்லாமல் இருந்தபடியால் திருவுளச் சீட்டுப் போட்டுத் தங்களிற் சிலரை கடலிற் தள்ளிவிடுவதென்று தீர்மானித்துக்கொண்டார்கள். அவர்களுக்குள்ளாக இரண்டு சகோதரர்கள். அவர்களில் மூத்தவனைக் கடலிலே தள்ளும்படி திருவுளச்சீட்டு விழுந்தது அவனை இளையவன் மிகுந்த அன்போடு கட்டித் தழுவி அழுதுகொண்டு மற்றவர்களைப் பார்த்துச் சொல்லுகிறான்: "என் தமையனுக்குப் பெண்சாதியும் பிள்ளைகளும் மூன்று சகோதரிகளும் இருக்கிறார்கள். அவர்களைப் போஷிக்கிறதற்கு என் தமையனாரைத் தவிர வேறு கதியில்லை; நானோ ஏகாங்கியாயிருக்கிறேன். நான் இறந்துபோவதனால் ஒருவருக்கும் நஷ்டமில்லை. ஆகையால் என்னுடைய ஜேஷ்டருக்குப் பதிலாய் என்னைச் சமுத்திரத்தில் தள்ளவேண்டும்" என்று பிரார்த்தித்தான். தம்பியினுடைய பக்ஷ மிகுதியைக் கண்டு தமையன் ஆச்சரியம் அடைந்து, இப்படிப்பட்ட சகோதரனை எனக்காகஇறக்கும்படி செய்வது அநீதியானதால் என்னையே தள்ளிவிடவேண்டும்' என்று மன்றாடினான். மூத்தவனைக் கடலில் தள்ளாதபடி இளையவன் அவனைக் கட்டிப்பிடித்துக்கொண்டான். அவன் எவ்வளவு பலமாகத்தமையனைக் கட்டிப் பிடித்துக்கொண்டானென்றால், அவர்கள் இருவரையும் வெவ்வேறாய்ப்பிரிப்பது அசாத்தியமாய் இருந்தது. இறுதியில் இளையவனுடைய தொந்தரவைப் பொறுக்கமாட்டாமல் அவனுடைய இஷ்டப்படி அவனைச் சமுத்திரத்தில் தள்ளிவிட்டார்கள். அவன் நல்ல நீச்சுக்காரனாதலால் அவன் நீந்திக்கொண்டுவந்து அந்தப் படகின் சுக்கானை ஒருகையாலே பிடித்தான். அந்தக் கையை ஒருமாலுமி வாளாலே வெட்டிவிட்டான். அவன் உடனே சமுத்திரத்தில் விழுந்து எழுந்து படகை மற்றொருகையாற் பிடித்தான். அந்தக் கையையும் அந்தப் பாவிப் பயல் தறித்து விட்டான். அவன் இரண்டு கைகளையும் இழந்தும் தண்ணீரில் முழுகாமல் ரத்தப் பிரவாகத்துடன் காலினால் நீந்திக்கொண்டு தண்ணீரில் நிற்கிற பரிதாபமான காட்சியும் அவனுடைய சகோதர பக்ஷமும் படகிலிருந்தவர்களுக்கு இரக்கத்தை உண்டுபண்ணியபடியால் அவர்கள், 'இந்த ஒரு பிராணனை ரக்ஷிப்பதனால் நமக்கு என்ன நஷ்டம் சம்பவிக்கக் கூடும்' என்றுசொல்லி அவனைப் படகின்மேல் ஏற்றிக்கொண்டு அவனுடைய காயங்களைக் கட்டிச் சொஸ்தப்படுத்தினார்கள். அவர்கள் சிலநாள் யாத்திரைசெய்து தெய்வசகாயத்தினால் குறித்த இடத்துக்குச் சிந்தாரகிதராகப் போய்ச் சேர்ந்தார்கள்.

# "மிருகத்தின் தோலை மனிதன் தின்னலாம்!"

## இந்திய தோலாராய்ச்சி நிபுணரின் அபிப்பிராயம்!

ஆதிகாலத்தில் மனிதன் காட்டுமிராண்டியாக வாழ்ந்த காலம் முதல், இன்று வரை மிருகங்களின் மாமிசமே உணவாகக் கருதப்பட்டு வந்திருக்கின்றது. ஆனால், எதிர்காலத்தில், பதப்படுத்தப்பட்ட மிருகங்களின் தோலையும் மனிதன் உணவாக உட்கொள்ளலாம் என்று பிரபல இந்திய தோல் ஆராய்ச்சி நிபுணரான டாக்டர். வை. நாயுடம்மா அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்!

"இன்னும் கொஞ்ச நாட்களில் மிருகங்களின் தோலை உணவுப் பொருளாக உபயோகிக்க முடியும்! ஜெர்மனியில் தலைமயிரிலிருந்து சிறந்த உணவுப் பொருள் தயார் செய்கிறார்கள்! தலைமயிர், தோல், இவற்றிலெல்லாம் புரதசத்து நிறைந்திருக்கிறது. அதை செரிக்கக்கூடியதாகச் செய்துவிட்டால், உணவாகிவிடும்!" என்று அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். மேலும், தோலின் தனித்தன்மையைப் பற்றி அவர் குறிப்பிடுகையில். "வீணாகும் குப்பை என்று கருதி எறிந்த உதிரித்தோல்களிலிருந்து, எத்தனையோ விலைமதிப்பற்ற பொருட்களை உற்பத்தி செய்யமுடியும், உதாரணமாக உதிரித் தோல்களைச் சரிப்படுத்தி அட்டைகள் முதலிய உபயோக கரமான பொருட்களைச் செய்யலாம்!

இந்த இருபதாம் நூற்றாண்டில் தோல் உபயோகிக்கும் பல இடங்களில், இன்று நாம் ரப்பரை உபயோகிக்கின்றோம். ஆனாலும். தோலில் பல்வேறு நன்மைகள் இருக்கின்றன. உள்ளே காற்றை அனுப்புவதிலும், வெப்ப நாட்களில் உள்ளே வெப்பத்தை விடாமலும், குளிர் நாட்களில் உள்ளே குளிரை விடாமலும், அழுத்தத்திலும், உறுதியிலும், தோலுக்கே உண்டான தனித்தன்மை பல இருக்கின்றன. உயிரிலிருந்து உண்டானதல்லவா தோல்? அதனால்தான் அதனிடம் பதப்படுத்தியபிறகும் அருமையான உயிர்க்குணங்கள் இருக்கின்றன! ரப்பரையும் கலந்து தோலின் உபயோகத்தை — குணத்தை அதிகப்படுத்த முடியுமா என்பதை இப்பொழுது ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறோம்! தோலை அப்படியே விட்டுவிட்டால் அழுகி நாற்றமெடுத்துத்தானே போகும்? தோலைப்பதனிடுவதால் அதைத் தடுக்கவும், நல்ல முறையில் பயன்படுத்தவும் முடியும்.

வருடத்தில் சுமார் மூன்று கோடி ரூபா பெறுமதியுள்ள தவளைகளின் கால்கள் 'சூப்' செய்வதற்காக் கொச்சியிலிருந்து பிரான்சுக்கும், அமெரிக்காவுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தவளைகளின் கால்கள்மட்டும்தான் ஏற்றுமதி செய்யப்படுகின்றதே தவிர, மற்றப் பாகங்கள் எல்லாம் வீணே தூக்கியெறியப்பட்டு வந்தது. அந்தப் பாகங்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்ததில், தவளைகளின் மாமிசம் கோழிகளுக்குச் சிறந்த உணவாகப் பயன்படும் எனத் தெரிந்தது. தவளைகளின் தோலைப் பதப்படுத்தி, சிறுசிறு தோல்சாமான்கள், மணிபர்ஸ், பேனா, பென்சில் போடும் தோலுறைமுதலிய பல உபயோகப்படக்கூடிய பொருட்களைச்செய்யலாம். அத்தோடு, இதுபெரும் லாபகரமான தொழிலுமாகும்."

இவ்வாறு, உலகத்தின் பெரிய தோலாராய்ச்சிக் கழகத்தின் தலைவரும், டைரக்டருமான இந்தியாவைச்சேர்ந்த தோலாராய்ச்சி நிபுணர், டாக்டர் நாயுடம்மா அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்!

# நாடகத்தைப் பற்றி......

'தமிழ்' என்றுல் 'இனிமை' என்று பொருள். அந்த இன்பத் தமிழையுங்கூட இயல், இசை, நாடகம் என்று முத்தமிழாக வகுத்திருக்கின்றுன் தமிழன்! அந்த முத்தமிழில் ஒன்றுதான் நாடகம். அந்த நாடகத்தைப்பற்றிப் பல்வேறு நாட்டு அறிஞர்கள் பற்பலவிதமாகத் தங்கள் கருத்துக்களைக் கூறியிருக்கின்றுர்கள். அவைகளில் சில இதோ—

● "மேனுடுகளில் நகரசபைகள் நாடகக் கலைக்காகப் பெரும் உதவி செய்கின்றன. இனி நமது நாட்டிலும் நகரசபைகள் நாடகக் கலைக்குத் தேவைப்பட்ட உதவிகளைச் செய்து தருமென நம்புகிறேன்!"
-டாக்டர். ஆர். கே. சண்முகம் செட்டியார்.

● "உயர்ந்த நாடகங்களுக்குப் பண வசூல் இருக்காது. பணவசூல் அதிகமாக இருக்கும் நாடகங்கள், உயர்ந்தவையாக இருக்காது!"
—ஜெர்மாயனிப் பழமொழி.

● "நாடகக்கலை அபிவிருத்தியடையவேண்டுமென்றுல், நாடகத்தின் முக்கிய அம்சமாக விளங்கும் நடிகர்களுக்கு நல்ல சம்பளமும், வாழ்க்கை வசதியும் செய்து தரவேண்டும்."
— C. N. அண்ணுத்துரை (M. A; M. L A.)

● "சமூகக் கயவர்களையும், அநீதியின் அவதாரமாக இருப்பவர்களையும்நாடகங்களின் மூலமாக நேரடியாகத் தாக்கி, அவர்களைத் திருத்த முடியும்!"
— அரிஸ்டோ பேனஸ் (கிரேக்க நாடக ஆசிரியர்)

● "கூத்தாடுவதும், குண்டி நெளிப்பதும் ஆற்ருதவனின் செயல்"
—ஈழத்தமிழ் நாடோடிப் [பழமொழி

● "ஆடலும் பாடலும் அலுப்புத் தீர, நாடகம்பார்ப்பது நலிவுகள் மறக்க"
— நாமக்கல் கவிஞர், வே. ராமலிங்கர்பிள்ளை.


● "எத்துறையிலும்முன்னேற்றம் காணுவதற்கு. அனுபவம் என்பது மிக முக்கியம். அதே போன்று தான் நாடகங்களை எழுதவும், அவற்றைத் தகுந்த முறையில் அமைக்கவும் அனுபவம் இன்றியமையாதது!"
— எஸ். சண்முகநாதன் (ராஜு)

● "நாடகத்தினுல் இன்பம் பெருகுகிறது. இலவசமென்றுல் நாமும் சாயம் பூசித் தினந்தோறும் நடிக்கமாட்டோம். அன்பர்களும் காசைக் கொடுத்து. இரவில் கண் விழித்து நாடகத்தைப் பார்க்கமாட்டார்கள்."
—நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம்

● "நாடகக்கலை முற்காலத்தில் சமய போதனைகளையும், நீதி நெறியையும் புகட்டக் கூடிய முறையில் அமைந்திருந்தது. மக்கள் சமய நம்பிக்கைகொள்ள இந்த நாடகங்கள் பெரிதும் உதவி புரிந்ததுடன், ஒரு கட்டுக் கோப்பான வாழ்க்கைக்கும் பெரிதும் உதவியாக இருந்தது. சமீபகாலங்களில் நடிகர்கள் தொகை அதிகரித்து வருவதும், பல நாடகமன்றங்கள் தோன்றுவதும் வரவேற்கத்தக்கன. பெரும்பாலும் இன்று நாடகங்கள் மக்களுக்கு நல்ல நீதிகளைப் போதிக்கவில்லை. என்றுலும், சில நல்ல கருத்துள்ள இதிகாச, புராண நாடகங்கள் மேடையேறுகின்றன என்பதையும் குறிப்பிடவேண்டும்.

நடிப்புக்கலைக்கு சினிமா ஓரளவு பங்கம் விளைவிக்கின்றது. சினிமாவைப் பார்த்துப் பார்த்து நாடகநடிகர்கள், தாங்களும் சினிமா நடிகர்களைப்போல நடிக்கஆசைப்படுகிருர்கள். இதனுல் நாடகத்தின் சில நல்ல அம்சங்கள் சிலவேளைகளில் பாதிககப்படுகின்றன!"
— கலையரசு சொர்ணலிங்கம்

# கிளியே, தூது செல்லாயோ!



கிளிகளின் அழகைக் கண்டு மயங்காதவர்கள் யார் இருக்கிருர்கள்? மகா அலெக்சாண்டர் இந்தியாவின்மீது படையெடுத்தபோது அங்குள்ள கிளிகளைக்கண்டு மயங்கிவிட்டாராம்! தன் நாட்டுக்குத் திரும்பிப் போகும்போது சில கிளிகளைத் தம்முடன் கொண்டுபோனுராம். அதற்குப் பிறகு ஐரோப்பியர்களுக்குக் கிளி 'ஆசைப் பறவை' ஆகிவிட்டது! அன்றுமுதல் கீழ்நாட்டிலிருந்து மேல் நாடுகளுக்குச் செல்லும் கப்பல்களில் கிளிகளையும் ஏற்றிச் செல்வது வழக்கமாகிவிட்டது. ரோமாபுரியிலிருந்த கவிஞர் ஒருவர், தான் அருமையாக வளர்த்த கிளியைப் பற்றிக் காவியமே பாடியிருக்கின்றுர்! கிளியின் ஆயுள்காலம் எவ்வளவு தெரியுமா? சுமார் எழுபது ஆண்டுகள்வரை கிளி உயிருடன்வாழும்!

நெல் வயல்களிலிருந்து, கிளி பறந்துபோகும் அழகுக் காட்சியைக் கண்ட கவி காளிதாசன், காமனுடைய வில்லோடு கிளியை ஒப்பிட்டுப் பாடியிருக்கிருனே!

மேலே உள்ள படத்தில், பஞ்சவர்ணக்கிளியைக் கையில் வைத்துக் கொஞ்சிவிளையாடும் வஞ்சிக்கொடி யார் என்பது தெரிகிறதா? நாட்டிய உலகிலிருந்து, இன்று நடிப்பு உலகில் புகுந்திருக்கும் ஈ. வி. சரோஜாதான் அவர்!

# பாலையாவுக்கு நிகரான சிங்கள நடிகர்?

"தமிழ்த் திரைப்பட உலகில் இன்று சிறந்து விளங்கும் வில்லன் நடிகரைப் போன்றவர்தான், இன்று சிங்களப் படங்களில் சிறந்தவில்லன் நடிகராகத் திகழும் திரு. டொமி ஜெயவர்த்தனு. நல்ல திறமையும், சிறந்த பாவ உணர்ச்சிகளும் இவரிடம் ஒன்று சேர்ந்து காணப்படுகின்றன.

பொதுவாக, இலங்கையிலுள்ள சிங்கள நடிகைகள் நன்ருகப்படித்திருக்கிருர்கள். ஆகையால் அவர்களிடம் நல்ல பண்புகள் காணப்படுகின்றன. குறிப்பாக லடி ரணசிங்க என்பவர் ஒரு சிறந்த நடிகர். நமது தமிழ்நாட்டு முன்னணி நடிகர்களுக்குச் சமமானவர். பிளோரிடாவும் சிறந்த நடிப்புத் திறமையுடையவர்தான் தற்போது இவர் முன்னணி நட்சத்திரங்களின் பட்டியலில் சேரக்கூடிய அளவு முன்னேறியிருக்கிருர் ரீட்டா, காந்தி குணதுங்க ஆகியோர் தங்கள் பாத்திரங்களை உணர்ந்து நடிப்பவர்கள் என்று சொல்லலாம் இவர்களும் முன்னணிநட்சத்திரங்களாகப் பிரகாசிப்பவர்கள். இவர்களைத்தவிர, இன்னும் சிறந்த நடிக — நடிகைகளும் இலங்கையில் இருக்கிருர்கள்" என்று, தமிழ்நாட்டின் பிரபல டைரக்டர் திரு. டி. எஸ். ராஜகோபால் ஒரு நிருபருக்களித்த பேட்டியின்போது குறிப்பிட்டார்! ●

# மணவாழ்க்கை!

பிரசாத் மூவீஸார் 'தாயில்லாப் பிள்ளை' என்ற படத்தை தயாரித்தது வாசகர்களுக்குத் தெரிந்ததே. இப்பொழுது அவர்கள் தங்கள் இரண்டாவது தயாரிப்பாக 'மணவாழ்க்கை" என்ற பெயரில் ஒரு படத்தைத் தயாரித்து வருகின்றனர். திரு. பிரசாத் டைரக்ட் செய்யவிருக்கும் இந்தப்படத்திற்கான கதை வசனத்தைத் திரு மு கருணநிதி எழுதவிருக்கின்ருர். இப்படத்தில் விஜயகுமாரி முக்கிய பாகமேற்று நடிக்கவிருக்கிருராம்!

# "சாகப் பயப்படுகிறேன்!" கண்ணதாசன் சொல்கிருர்!

சாக அஞ்சுவதாகக் கவிஞர் கண்ணதாசன் கூறினுர்.

"எனக்குத் தெரிந்தவரை காலஞ் சென்ற சினிமா கலைஞர்களில் காளி. என். ரத்தினத்தைத்தவிர மற்ற எல்லாரையும் நிதி திரட்டித்தான் தூக்கிப் போட்டுஇருக்கிருேம். செத்தபிறகு மண்டபம் எழுப்புவோம்; சின்னம் அமைப்போம், அது செய்வோம், இது செய்வோம் என்று பேசுவார்கள். அந்த பேச்சோடு நின்றுவிடுவார்கள். ஒன்றும் செய்யமாட்டார்கள். ஆகவே நான் சாகப் பயப்படுகிறேன். வாழ எனக்குப் பயமில்லை. வாழ எனக்குத் தெரியும். ஆனுல் நான் இவர்களை நம்பி சாகத்தான் பயப்படுகிறேன். ஆகவே இதுபோன்ற நிலை கலைஞர்களுக்கும், சினிமா தொழிலில் உள்ள ஏனையோருக்கும் ஏற்படக்கூடாது. என்பதற்காக தென்னிந்திய சினிமா வர்த்தக சபை, இன்சூரன்ஸ் திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டும்"

இவ்வாறு கண்ணதாசன் கூறினுர்.

# தாடியைச் சிரைத்த காரணம்?

"லாரன்ஸ் ஆப் அரேபியா" என்ற ஆங்கிலப்படத்தில் நடித்துவிட்டு பம்பாய் திரும்பிய பிரபல ஹாஸ்ய நடிகர் ஜோகர், கப்பலிலிருந்துஇறங்குவதற்குமுன்னர், தான் திரைப்படத்தில் நடிப்பதற்கென வளர்த்துக் கொண்டிருந்த தாடியையும், மீசையும் முதல்வேலையாகச் சவரம் செய்கொண்டார்.

"இதனுல் இரண்டுவித சங்கடங்கள். முதலாவது என் 'பாஸ்போர்ட்' படத்தில் மீசையும் தாடியுமில்லை. இரண்டாவதுஎன்னை வரவேற்க வரும் விசிறிகள் என்னை அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் மாலைபோடாமலே போய்விடுவார்கள்!" என்று வேடிக்கையாகக் கூறினுர் அவர்.

# இத்தால்... சகலரும் அறிவது!

### பலே சான்ஸ்!

மாணவர்களைக்கொண்டு தம் வீட்டு வேலைகளைத் திறம்படச் செய்துவந்த ஆசிரியர்கள் 'தேசிய.சேவை' என்ற நாமத்தை வைத்துக்கொண்டு, மாணவர்களின் மூலமாகவே சனி—ஞாயிற்றுக் கிழமைகளில், எந்த வேலையையும், எந்தவித தடையுமின்றிச் செய்துவிட ஆசிரியர்களுக்கு அரசாங்கம் நல்ல ஒரு சந்தர்ப்பத்தை ஆக்கித் தந்திருக்கிறதே!...

நெடுந்தீவு — செ. மகேந்திரன்.

### கண்டேன் அந்தக் காட்சியை!

கடந்த வாரம் புதினத்தில் "வாராய் என்தோழி வாராயோ ... என்று வாலைக்குமரியிடம் வம்புசெய்த வாலிபர் வாங்கிமுடிந்த வரலாறு" என்ற விஷயத்தைக் கண்டபொழுது எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. காரணம், அந்தக் காட்சியைக் கண்ணாரக் கண்டவர்களுள் நானும் ஒருவன். நடந்த நிகழ்ச்சியை உள்ளது உள்ளபடி அழகாக அப்படியே எழுதிவிட்டாரே கொழும்பு நிருபர்!

கொழும்பு-10. —வி. மாசிலாமணி.

### நையாண்டி நாயனர் புராணம்!

தமிழ் அரசுக் கட்சி செய்த சத்தியாக்கிரகத்தைப் பல கோணத்திலும் வைத்துக் கண்டித்தும், நையாண்டி பண்ணியும் தமிழ் காங்கிரசாரால் வெளிவரும் பத்திரிகையான 'தமிழன்' வாரந்தோறும் பிரசுரித்து வருகிறது. தைப்பொங்கல் தினத்தன்று நடைபெற்ற முத்தமிழ் விழாவின்போது, உடுப்பிட்டி பிரதிநிதியும், தமிழ் காங்கிரஸ் அங்கத்தவருமான திரு. சிவசிதம்பரம் சத்தியாகிரகத்தை அவமதித்து பேசுபவர்களையும், எழுதுபவர்களையும் காரசாரமாகக் கண்டித்து பேசினர். அவர் ஓர் பகுதியில் "சத்தியாக்கிரகம் என்ன சாதித்துவிட்டது எனச் சிலர் கேட்கிறார்கள். ஆனால் இந்த அரசாங்கத்தை அவசரகாலச் சட்டங்களாலும் படை வீரர்களைக்கொண்டும் ஆளச் செய்துவிட்டோம் என அவர்களுக்குக் கூற விரும்புகிறேன்" என்றார். திரு. சிவசிதம்பரத்தைப் பார்க்க வந்திருந்த தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர்கள், முகத்தில் அசடு வழிய ஓர் மூலையில் நின்றுகொண்டிருந்தனர்!

திருகோணமலை. — 'திருமலைராஜ்"

### கவிஞர்செய்த பிழை!

கடந்தவாரம் வெளியாகியிருந்த 'பொங்கல் அடுவீரே!' என்ற அதே கவிதை இரண்டு தினங்களுக்குப் பின் தினகரன் பொங்கல் இதழிலும் பிரசுரிக்கப்பட்டிருந்ததே? ஒரே கவிதையைப் பல பத்திரிகைகளுக்கும் அனுப்புவதால் ஏற்பட்ட பிழைதான் இது என்று நினைக்கிறேன்.

மட்டுநகர். — கே. இராசையா.

### எனது கருத்து இது!

காதல் என்றால் அன்பின் வளர்ச்சியால், முதிர்ந்த அன்பால் ஒத்த வயதுடைய ஆணுக்கும், பெண்ணுக்கும் பருவகாலத்தே ஏற்படுவதே என்று கூறலாம். அதுவன்றி பணம், பதவி, உறவுமுறை இவற்றில் ஏதோ ஒன்றிற்கு அன்பில்லாமல் அக்காதல் ஏற்பட்டிருக்குமானால், அது நீடிக்காது, நிலைக்காது. நம் யாழ்நகரஎழில் நங்கை தன் மைத்துனர்மேல் தூய்மையான அன்புக் காதல்தான் கொண்டிருக்கிறார். ஆனால், அந்த லண்டன் மேதை அன்பில்லாமல் மேற்கூறிய பணம், பதவி, உறவு ஏதோ ஒன்றிற்காகத்தான் தன் மைத்துனிமேல் காதல் கொண்டிருந்திருக்கிறார். தான் லண்டனிலிருந்து திரும்பியவுடன் தூய்மை அன்பைப்பற்றி தெரியாத அவர் மாற்றானை மணக்க, மாலையிட எண்ணியதில்வியப்பில்லை. ஆனால் அதற்காக நம் காதல்முறிந்தால் துறவா? என்ற கட்டுரையில் காதல் தலைவி துறவு கொள்ளத் தேவையில்லை. துறவு என்றால் இளங்கோவடிகள், விவேகானந்தர்போல்எல்லாவசதிகளும் இருக்கின்ற காலத்தே துறவுகொள்வதுதான் துறவாகும். தோல்விக்காக இவர் பூண்ட துறவு கூடாது. அது கோழைத்தனம் புதுயுகப் புரட்சிப் பெண்களுக்கு இழுக்கு!

யாழ்ப்பாணம். — உ. இராமசாமி

# மியாவ் மியாவ் பூனைக்குட்டி!

இங்கிலாந்தில் ஸ்டிராப்ஹயர் என்னும் இடத்தில் எழுபது அடி உயரம் உள்ள ஒரு மரத்தின் உச்சியில் ஒரு பூனை ஏறி உட்கார்ந்து கொண்டு. ஏழு நாட்களாகத்தொடர்ந்து உண்ணாவிரதம்இருந்ததோடு கீழே இறங்கி வரமாட்டேனென்று பிடிவாதம் பிடித்துக்கொண்டு இருந்தது. அந்த ஊர் ஜனங்கள் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார்கள். ஒன்றும்பலன் இல்லாமல்போகவே, கடைசியில் அந்த எழுபது அடி மரத்தையே வெட்டிச் சாய்த்துப் பூனையைக் காப்பாற்றினார்களாம்!

* * *

இந்தியாவில், பம்பாய் நகரில் ஸர். ரொபர்ட் கிராண்ட் என்பவர்கவனராகஇருந்தார். புனாநகரில் அவர் காலமானார். அவர் மரணமான அதே நேரத்தில் அவர் வசித்துவந்த மாளிகையிலிருந்து ஒரு பூனை வெளியில் வந்தது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் உலாவிக்கொண்டிருந்தது. இந்தக் காட்சியை வாயிற்காப்பாளன் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான்.

பிற்பகல் நேரத்தில் அந்த கவர்னரும் அதே இடத்தில் உலாவுவது வழக்கம் பூனையும் அவர் உலாவுவதைப்போலவே தான் உலாவிக்கொண்டிருந்தது. இந்த விஷயத்தைவாயிற் காப்பாளன். கவர்னர் மாளிகையிலிருந்த மற்றவர்களிடம் கூறினான். இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட ஒரு சாஸ்திரியார், அதற்கு ஒரு விளக்கம் கொடுத்தார்.

கவர்னர் ஸர்.ரொபர்ட் கிராண்ட்டின் உயிர்தான் அந்தப் பூனையின் உடலுக்குள் கூடுவிட்டுக் கூடு பாய்ந்திருக்கிறது என்று அவர் கூறினார். ஆனால், அந்தப்பூனையை வாயில்காப்பாளனால் குறிப்பாக அடையாளம் காட்ட முடியவில்லை! இதன் காரணமாக பிற்பகல் வேளையில் கவர்னர் மாளிகையைவிட்டு எந்தப் பூனை வெளியில் வந்தாலும், காவலர்கள் எல்லோரும் தம் கையில் வைத்திருக்கும் துப்பாக்கியைத் தூக்கித் தோளில் வைத்து, மரியாதையாக 'சல்யூட்' அடிப்பது வழக்கமாகிவிட்டது! அந்தக்கவர்னர் இறந்தபின், இருபத்தைந்து வருடகாலம் இந்த வழக்கம் தொடர்ந்து இருந்து வந்ததாம்!

## காதலால் நோதல்: 1

யாழ்ப்பாணத்துக் கலாசாலை யொன்றில் உண்மையாகவே நடைபெற்ற இந்த 'காதல்' சம்பவத்துக்கு கவிஞர் 'கமலக்கண்ணன்' காவிய அந்தஸ்து அளிக்கிறார்.

# "முயற் கொம்பாய்ப் போனதேனோ?"

தமிழ்மொழிப் புலவர் 'தாமரைக் கிழவனார்'
குமிழ் முலைக் கொடிஇடைக் காதலிக்(கு) எழுதிய
அமிழ்தினும் இனியதோர் ஊடற் கடிதம்:-

"புலவரே! என்ன கோலம்?
பொலிவெலாம் இழந்துபோனீர்;
நலமிலைப் போலும் உள்ளம்!
நேர்ந்ததென்? சொல்லும் ஐயா!
கலவரம் வேண்டாம்." என்று
கலைமணி—உன்றன் தோழி
நிலைமையை அறிய நின்றாள்.
நான் இதைச் சொல்ல லுற்றேன்:-

"கலைமணி கேட்டி! இந்தக்
கலைபயில் சாலை தன்னில்
விலைமதிப் பரிய அன்பை
வேற்கணால் பாய்ச்சி, என்னுள்
நிலைபெற இருந்த நங்கை
நேற்றெனை இகழ்ந்தாள்; கேட்டுச்
சிலையெனச் சமைந்து போனேன்;
செய்வதொன்(று) அறியேன்." என்றேன்.

"ஈதென்ன புதுமை ஐயா?
எழுந்ததோர் ஊடல் போலும்!
சூதறு கடிதந் தந்தால்
சுபமதாய் முடிப்பேன் எல்லாம்;
பாதகஞ் செய்யேன்! உண்மை!
பருவரல் ஒழிவீர்!" என்று
தீதிலாத் தோழி தூண்டத்
தீட்டினேன் இதனைக் காண்க:-

வகுப்பொரு நாலு தன்னில்
வந்துநீ பயின்றாய்; அன்றே
அகத்தினில் நுழைந்து விட்டாய்;
அன்றுதொட்(டு) இன்று மட்டும்
மிகமகிழ்ந்(து) இருந்த என்னை
மணந்திடும் எண்ணத்தாலே
பகர்ந்தனை அன்றோ நீயும்
பலப்பல இன்ப வார்த்தை?

"அன்பு(ள்)ளம் உண்டு" என்றாய் நீ
"அத்தனையும் உனக்கே" என்றாய்;
"மன்னுயிர் பிரிந்திட்டாலும்
மறந்திடேன் உன்னை" என்றாய்
'இன்பமே தருவ தன்றி
இருந்துயர் உறுத்தேன்" என்றாய்
முன்பிவை சொன்னாய்; இன்று
முயற் கொம்பாய்ப் போன தேனோ?

என்னுளம் அறியாய்; என்றும்
எனக்(கு) இடர் செய்வ(து) ஒன்றை
உன்னுளம் உணர்வ(து) எப்போ(து)?
உணர்ந்தும்! நீ உணரார் போல
மண்ணிலே நடிக்கின் றாயோ?
மயங்கிடும் கள்ளி! நீதான்
கண்ணினால் செய்த லீலை
கனவிலும் மறக்கிலேன் யான்.

கண்ணெனும் கொடிய வேலால்
குத்தினாய் உள்ளந் தன்னை;
புண்ணவை அனைத்தும் உன்றன்
புன்னகை மருந்தால் போக்க
எண்ணினாய் இல்லை அன்பே!
என்னைவிட் டெறிந்தாய்; அந்தோ!
தண்ணளி என்ற பண்டம்
தையலர்க் கில்லைத் தானோ?

[7-ம் பக்கம் பார்க்க]

# உங்கள் காலபலன்

## இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

**21-1-62 முதல் 27-1-62 வரை**

**மேடம்:** தொழில் விஷயங்களில் முன்னேற்றம் தொடர்ந்து காணப்படுகிறது. ஆனல் பல எதிர்ப்புகளும், கண்டனங்களும். இருக்கும் பூமியால் லாபமுண்டு.

**இடபம்:** பிதாவழி பந்துக்களால் சங்கடங்கள் ஏற்படும். மனதில் அமைதி நிலவாது. ஆனல் பொருள் விருத்தியுண்டு இளையசகோதர சகோதரிகளாலும் நன்மைகிட்டும்

**மிதுனம்:** ஓர் கஷ்டமான வாரம். மனதில் அமைதி நிலவாது. விஷயங்களில்அவதானமில்லாதிருந்தால் வீண் குறைகள் கேட்கநேரிடலாம். குடும்பச் சச்சரவுகளும் காணப்படுகின்றன.

**கடகம்:** குடும்பச் சச்சரவுகள் காணப் படுகின்றன. தொழில் ஸ்தானத்தில் சங்கடங்களும் உண்டு புதியவிஷயங்கள் தாமதமாக நிறைவேறும், நண்பர்களுடன் தப்பபிராயங்கள் உண்டாகும்.

**சிங்கம்:** எதிர்ப்புகளிலிருந்தும் கருமங்களில் வெற்றியீட்டமுடியும். கீர்த்தியும் சத்துரு ஜயமும் காணப்படுகின்றன. ஆனல் பெண் உறவினர்களால் சில சங்கடங்கள் உண்டாகும்.

**கன்னி:** பலகுறைகள் கேட்கநேரிடும். மனக்கவலையும் தேகசுகவீனமும் காணப்படுகின்றன. வயிற்றில் நோய்கள் உண்டாகும். ஆனல் தொழில் முன்னேற்றமுண்டு.

**துலாம்:** உறவினருடன் சிறு விரோதங்கள் ஏற்படும் சிறு விபத்துக்களும் ஏற்படலாம் மாதாவுக்குப் பீடைகாணப் படுகிறது. தொழில் ஸ்தானத்திலும் சங்கடங்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:** பொருள் விருத்தியுண்டு. எதிர்ப்புகளிலிருந்தும் அவற்றைச் சமாளித்து முன்னேற முடியும். பிதாவழி பந்துக்களால் சிறு சங்கடங்கள் நேரிடலாம்.

**தனுசு:** ஞாயிற்றுக் கிழமையும் திங்கட்கிழமையும் அவதானமாகக் கழிக்கவும். வாக்கு விரோதங்கள் ஏற்படும். புதிய விஷயங்களில் தாமதசித்தியுண்டு.

**மகரம்:** கருமங்கள் சிக்கலாக இருக்கும். மன அமைதியின்மையும் குடும்பச்சச்சரவுகளும் காணப்படுகின்றன. தேக சுகமும் பாதிக்கப்படுன்றன செவ்வாய், புதன்கிழமைகளையும் வியாழன் காலையையும் அவதானமாகக்கழிக்கவும்.

**கும்பம்:** செலவினங்கள் அதிகமாகும். உறவினருடன் விரோதங்களும் வியாழன்பிற்பகல் வெள்ளி சனி வாராங்களை அவதானமாகக் கழிக்கவும். சத்துரு ஜயமுண்டு.

**மீனம்:** தொடர்ந்தும் தொழில்விஷயங்களில் முன்னேற்றமுண்டு கீர்த்தியும் லாபமும் கிட்டும். ஆனல் தேகசுகமும் பாதிக்கப்படும்,


### சோதிடம்

உங்கள் பெயர், பிறந்தநாள், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினல் உங்கள் ஒரு வருட காலபலன் மிகச் சரியாக எழுதிஅனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்துஅனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூ 3-00 அனுப்பினல் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.





# ஸிலூட்!

நீங்கள் ஒரு ஓவியராகவோ, அல்லது ஒரு புகைப்படப் பிடிப்பாளராகவோ இருந்தால், இந்தப் பெயரைக்கட்டாயம் அடிக்கடி உச்சரித்திருப்பீர்கள்! குறிப்பாக ஒரு பொருளை தெளிவாகக்காட்டாமல், வெறும் நிழலுருவமாக அமையும் படத்தைப் பார்த்திருக்கிறீர்களா? அந்த நிழலுருவத்தின் வேறு பெயர் 'ஸிலூட்' என்பது. இந்த 'ஸிலூட்' என்ற பெயர்தான், வரிக்கொடுமையின் மற்ருெரு பெயர்!

இது ஒரு ஆங்கிலப்பெயர் இல்லை. பிரேஞ்சுப் பெயர். ஓவிய – புகைப்பட அகராதியில் இந்தப் பெயர் நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. ஒருகாலத்தில், மக்கள் இடுக்கண் பட்டு, ஆற்ருது. அழுது வயிறெரிந்த கொடுமை இந்தப் பெயரின் பின்னல் மறைந்திருக்கிறதென்று சொன்னல் ஆச்சரியமாக இருக்கிறதல்வா? ஆனல் இது உண்மை, உண்மை, முற்றிலும் உண்மை!

'ஸிலூட்' என்பது ஒரு மனிதரின் பெயர். அதுவும் பிரான்ஸ் தேசத்தின் நிதி அமைச்சர் ஒருவரின் பெயர்! இவர் பதினெட்டாம் நூற்ருண்டில் பிரான்ஸில் நிதிமந்திரியாக இருந்தகாலத்தில், மக்கள்மீது தாங்கமுடியாத வரிகளைப் போட்டு, பிரெஞ்சு மக்களின் வயிற்றெரிச்சலை வாரிக்கட்டிக் கொண்டார்! வயிறு வாடித் திண்டாடிய மக்கள், 'ஐயைய்யோ! கடைசியில்எங்கள்நிழலைத் தவிர வேறு ஒன்றையும் விட்டுவைக்காமல் இப்படிஎங்கள்மீது வரிக்கொடுமையைச் சுமத்தி வதைக்கிருரே, இந்த ஸிலூட்!' என்று குமுறிக் கண்ணீர் வடித்தார்கள். இப்படி அடிக்கடி புலம்பிய அந்த நாட்டுமக்கள், கடைசியில் 'நிழல்' என்ற சொல்லுக்கு வேறு பெயராக 'ஸிலூட்' என்ற பெயரைச் சூட்டிப் பரிகசிக்க ஆரம்பித்தார்கள். அதுதான் இன்று, ஓவிய அகராதியில் ஏறி அமர்ந்து கொண்டு நிழலுருவத்தைக் குறிக்கும் சொல்லாக உலகம் முழுவதிலும் புழங்கி வருகிறது!

காதலால் நோதல்: 1

## "முயற்கொம்பாய் போனதேனே?"

[6-ம் பக்கத்தொடர்ச்சி]

அன்பினை விதைத்தாய் என்னுள்;
அதுமுளை கொள்ளும்போது,
துன்பமே செய்ய நெஞ்சு
துடித்திட அதனைக் கொன்ருய்;
பின்புவந் தென்னைப் பார்த்து:
"பேசிடா திருப்பதேனே?"
என்றனை;... எதனைச் சொல்வேன்?......
இறந்தவன் புயிர்க்கும் போலும்!

அருகிலே வரவும் மாட்டாய்;
இனியன சொல்ல மாட்டாய்;
மருவிநான் உன்னை நோக்கின்
மற்றவர்க்(கு)அதனைச் சொல்வாய்;
அரியதோர் அன்பால் உன்னை
அடிக்கடி பார்ப்பதற்கும்
உரிமையே இல்லை யானல்
இனியெனக்(கு) என்ன பேச்சு?

பேச்சினை முறித்தாய் கண்ணின்
பார்வையைத் தடுத்தாய்; ஆனல்
மூச்சது நின்று மண்மேல்
மரிந்திடு மட்டும் உன்மேல்
பாய்ச்சிய என் நன் அன்பைப்
பறித்திட உன்னல் ஆமோ?
காய்ச்சிய நெஞ்சாய்! உன்போல்
கருணையை மறக்கமாட்டேன்;

நோயினை வளர்த்தாய்; அந்த
நோய்க்கொரு மருந்து செய்யாய்;
போயினை என்னை விட்டுப்
பொறுக்கிலேன்; பொன்னே! நான் உன்
நாயென நின்றேன்;— நன்றி
நாளெலாம் மறவேன்; ஊழி
ஆயதோர் காலமேனும்
உன்பணி சிரமேற் கொள்வேன்!

மனத்திலே இருக்கும் உன்னை
மனக்கணல் பார்த்து, மேலும்
மனத்சினுற் பேசி, மெய்யே
மனத்தினல் துய்த்து வாழ்வேன்.
எனக்(கு) இதன் மேலாய் இன்பம்
இனிப்பெற வழியே(து) அம்மா?
உனக்(கு) இனித் திட்டார் தம்மோ(டு)
உலகெலாம் புகழ் வாழ்க

'குமிழ்முலைக் கொடி இடை நங்கை! எழுதிய பதிலை அடுத்தவாரம் படியுங்கள்!

# வயது சென்ற காலத்திலும்

# இணைபிரியாத தம்பதிகள்!

கணவனும் மனைவியும் ஐந்து வருடங்கள் அன்பாக இணைந்து வாழமுடியாது அவஸ்தைப்படும் மேல் நாட்டில், ஒரு நூற்ருண்டுக்காலம் ஒற்றுமையாகவாழ்ந்த தம்பதிகளும் இருக்கிருர்கள் என்ருல் நம்புவது கஷ்டமாக இருக்கிறதல்லவா?

சார்ளிஸ்உஷர் தம்பதிகள் சமீபத்தில் தங்கள் 72-வது விவாக வருடாந்த விழாவைக் கொண்டாடினுர்கள். இருவருக்கும் இப்பொழுது 91 வயதாகிறது. இவர்களுக்கு இரண்டு பெண்களும் ஒரு மகனும் முறையே 70, 68, 64 வயதிலிருக்கிருர்கள்.

பிரிட்டனில் இவர்கள்தான் நீண்டகாலம் வாழ்ந்த தம்பதிபதிகளல்ல 1954-ம்வருடத்தில் ஜோன் அட்கொக் தம்பதிகள் தமது 80-வது வருடாந்த விழாவைக் கொண்டாடினுர்கள். ஆனுலும் இது உலகச் சாதனை அல்ல.

1938-ம் வருடத்தில் நீண்டகாலம் கூடி வாழ்ந்த தம்பதிகளென்ற பெருமையை துருக்கியைச்த சேர்ந்த ஒரு ஜோடி தட்டிக்கொண்டது மணமகனின் வயது 135 மணமகளின் வயது 140 ஆச்சரியப்படாதீர்கள்; முற்றிலும் உண்மை!

Registered as a news paper at the G. P. O. [redacted]

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

கி. ச காரியதரிசிகள் தேர்வு:

## 11 சிங்களவருக்கு 2 தமிழர்!

சமீபத்தில் கிராமசபைக் காரியதரிசிப் பரீட்சை நடைபெற்றபோது 300க்கு மேற்பட்ட கி. ச. லிகிதர்கள் அதில் பங்குபற்றினுர்கள். அவர்களுள் பதின்மூன்று கி. ச. லிகிதர்கள் அதிபர்கள் அதில் பங்குபற்றினுர்கள். அவர்களுள் பதின்மூன்றுபேர்கள் மட்டுமே காரியதரிசிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். இந்தப் பதின்மூன்று பேர்களுள் 11பேர் சிங்களவர். இரண்டே இரண்டு பேர்கள்தான் தமிழர். ஒருவர் நல்லூர்கிராமசபையைச்சேர்ந்த திரு. கே. சிவபாதம். மற்றவர் உடப்பு கிராமசபையைச் சேர்ந்த திரு. எஸ். ஞானசேகரம் பிள்ளை



## கல்லூரியில் தமிழ் மாணவருக்கு இடமில்லை? வித்தியாதிகாரிக்கு தொண்டமான் தந்தி!

எட்டியாந்தோட்டை அர்ச். கபிரியேல் கல்லூரியின் அதிபர், தமிழ்மாணவர்களுக்கு இடமளிக்க மறுத்துள்ளார். தற்போது பாலர் கீழ்ப்பிரிவில் 24 தமிழ்மாணவர்களும், பாலர் வகுப்பில் 2 தமிழ் மாணவர்களும்மாத்திரமே அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தக் கல்லூரியில் தமிழ் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டால், 50 சத விகிதத்திற்கும் கூடுதலாக இருப்பார்கள்எனமதிப்பிடப்பட்டுள்ளது. கல்லூரி அதிபரின் இந்தச் செய்கை குறித்து உடனடியாகக் கவனம் செலுத்துமாறு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எட்டியாந் தோட்டை மாவட்டத் தலைவர் திரு. கே. ஜீ. எஸ். நாயர் பிரதமருக்கு ஒரு தந்திச் செய்தி அனுப்பியுள்ளார். அந்தச் செய்தியில். "இவ்வாண்டு பாடசாலைகளில் குழந்தைகளின் பாடசாலை அனுமதி சம்பந்தமாக எந்தவித கட்டுப்பாடும்இருப்பதாகத் தெரியவில்லை ஆனல், எட்டியாந்தோட்டை மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு இடமளிக்க மறுக்கப்படுவதால் இப்பகுதியிலுள்ள தமிழ்ப் பெற்ருேர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்" என்று திரு. நாயர் குறிப்பிட்டுள்ளார்.

இது சம்பந்தமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ் தொண்டமான், கேகாலை வித்தியாதிகாரிக்கு ஒரு தந்திச்செய்தி அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

"இந்தப் பாடசாலையில் அனுமதிக்கப்பட்ட தமிழ் மாணவி ஒருத்தி, சில தினங்கள் கல்லூரிக்கு வந்து கல்விகற்க ஆரம்பித்தபின்னர், அந்த மாணவியின் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகக் கல்லூரி அதிபர் அறிவித்திருக்கிருர், இது ஒருநீதியற்ற செயலாகும்' என்று திரு. எஸ். தொண்டமான், கேகாலை வித்தியாதிகாரிக்கு அனுப்பியுள்ள தந்திச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## டிராக்டரில் ஆங்கில ஸ்ரீ குற்றம் யாருடையது?

தமது 'டிராக்டர்' இயந்திரத்தில் ஆங்கிலத்தில் 'ஸ்ரீ' எழுதிய எண்தகடு பொருத்தியிருந்ததாக, நாவற்குடாவைச் சேர்ந்த திரு, சின்னப்பு நடராஜா என்பவர் கிளிநொச்சி பொலீசாரால் கைதுசெய்யப்பட்டார்.

சிங்கள ஸ்ரீ எண்ணுக்குப் பதிலாக, ஆங்கிலத்தில் 'SRI' என்றஎழுத்து பொறிக்கப்பட்டிருந்தது என்பதுதான் அவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு, தாம்குற்றவாளியல்ல என்று கூறிய திரு. நடராஜா, வாசனப் பதிவுக்காரியாலயத்தினரால் தமக்கு அளிக்கப்பட்ட அத்தாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பித்தார். அதில், 'டிராக்டர்' இயந்திரத்தின் எண் '55 SRI 450' என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது! திரு. நடராஜாவும்அதன்படியே தனது இயந்திரத்தில் எண்ணை ஆங்கிலத்தில் எழுதியிருந்தார். இதை உணர்ந்த பொலீசார் அவரைக் குற்றவாளியல்லவென விடுதலை செய்தனர்!

அறிவிக்கின்ரேம்!

மாணவர்களினதும் ஆதரவாளர்களினதும் வசதியை முன்னிட்டு எமது அச்சகத்திலும்

புத்தக விற்பனை

நடைபெறுகிறது.

எஸ். எஸ். சண்முகநாதன் அன் சன்ஸ்

தபால் பெட்டி எண் 12

தொலைபேசி: 285 தந்தி: நாதன்

யாழ்ப்பாணம்.

ஸ்ரீ சண்முகநாத அச்சகம்

336-340, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

உங்கள்

பாடசாலைப் புத்தகங்கள்

கொப்பிகள்

உபகரணங்கள்

நியாயமான விலைகளில்

நம்பிக்கையுடன்

வாங்குவதற்கு:

ஆனந்தா புத்தகசாலை,

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: [illegible] இ. ச. வரதராசன்.

அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: [illegible], தந்தி: அச்சகம்.